முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

IDOP 150/2022

நாள்: 30.09.2024

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திரு.அ.அலாவூதீன், கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலபிரதிப் | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | ஜெயசந்திரன் | தாலுக்கா | : | நாகர்கோவில் |
| கிராமம் | : | நாகர்கோவில் | தொழில் | : | தனியார் பணி |

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) என்னுடைய சொந்த ஊர் நாகர்கோவில்.

2) திருமணபேச்சு வார்த்தை நடந்தபோது நான் சென்னையில் பணிபுரிந்து வந்தேன்.

3) எதிர்மனுதாரர் சொந்த ஊர் கும்பகோணம் பக்கத்தில் உள்ள பெரப்படி என்ற கிராமம்.

4) என் தந்தை ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். என் குடும்பத்தாருக்கு நான் ஒரே பையன்.

5) என் திருமணம் பற்றி என் அப்பாதான் பேசினார். எனக்கு தெரியாது.

6) அனைத்து வாய்தாக்களுக்கும் என் தந்தை என்னுடன் வருவார் என்றால் சரிதான்.

7) எதிர்மனுதாரர் தகப்பனார் மஸ்கட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

8) திருமண நிச்சயதார்த்தம் பெரப்படி கிராமத்தில்தான் நடந்தது.

9) திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் நான் வெளிநாடு சென்றுவிட்டேன்.

10) திருமணத்தின்போது எனக்கு ஒரு அல்டோ கார் கொடுத்தார்கள் என்றால் அவர் அண்ணன் வந்து என் வீட்டில் வந்து கொடுத்துவிட்டு சென்றார். 7.8 வருடங்களுக்கு முன்பு என் வீட்டில் விட்டு சென்றார்.

11) திருமணத்தின்போது நகை எதுவும் போடவில்லை.

12) எதிர்மனுதாரர் எதிர்உரையில் என்ன சொல்லி உள்ளார் என்று எனக்கு தெரியும்.

13) பவுனுக்கு பதிலாக ரூ.6 லட்சம் கொடுத்ததாக எதிர்உரையில் சொல்லி உள்ளார். ஆனால் அது உண்மையல்ல. அதற்கு நான் அதை மறுத்து மறுப்புரை எதுவும் போடவில்லை.

14) திருமணம் முடிந்தவுடன் திருமண வாழ்க்கை என் வீட்டில் தான் ஆரம்பமானது.

15) நிச்சயதார்த்தத்தின் போது நான் சென்னையில் பணிபுரிந்தேன். நிச்சயதார்த்திற்கு பிறகு வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றேன். திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் நான் வெளிநாட்டில் இருந்து வந்தேன்.

16) திருமணம் முடிந்த பின்பு 8 நாட்கள் கழித்து வெளிநாட்டிற்கு சென்றேன். அதன்பிறகு 1 வருடம் கழித்துதான் திரும்ப இந்தியாவிற்கு வந்தேன்.

17) திருமணம் முடிந்தவுடன் எதிர்மனுதாரரையும் என்னுடன் வெளிநாட்டிற்கு அழைத்து செல்வதாகதான் பேசிக்கொண்டோம்.

18) நான் வெளிநாடு சென்றபோது எதிர் மனுதாரர் கொஞ்ச நாட்கள் என் வீட்டில்தான் இருந்தார்.

19) திருமணம் முடிந்தவுடன் முதலில் 10 நாட்கள் என் மனைவி என் வீட்டில் இருந்தார்.

20) பாஸ்போர்ட் எடுப்பதற்காக எனது மனைவி அவரது வீட்டிற்கு சென்றார். பின்பு 5 மாதம் கழித்துதான் என் வீட்டிற்கு வந்தார். பாஸ்போர்ட் எடுத்த பின்புதான் என் வீட்டிற்கு வந்தார்.

21) பாஸ்போர்ட் காப்பியை என் வீட்டில் கொடுத்தார் என்றால் என் வீட்டில் இருந்தது நான் பார்த்தேன்.

22) பாஸ்போர்ட்டை வெளிநாட்டிற்கு என் பெற்றோர் அனுப்பவில்லை.

23) என் மனைவி வெளிநாட்டிற்கு என்னுடன் அலைபேசியில் பேசுவார். அவ்வாறு பேசும்போது பாஸ்போர்ட்டை என் தகப்பானரிடம் கொடுத்ததாக என்னிடம் சொல்லவில்லை. ஆனால் பாஸ்போர்ட் எடுத்துவிட்டதாக என்னிடம் சொன்னார்.

24) பாஸ்போர்ட் தேவை படாததால் அது குறித்து நான் எதுவும் கேட்கவில்லை.

25) வெளிநாட்டிற்கு அழைத்து செல்வதற்கு முயற்சி செய்தேனா என்றால் என் மனைவியை நான் படிக்க வைத்தேன்.

26) என் மனைவி திருமணத்தின்போது B.E ( E.E.E.) படித்து இருந்தார்.

27) நான் அவரை கம்புயூட்டர் கோர்ஸ் படிக்க வைத்தேன். இந்த விபரத்தை என் மனைவியிடம் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன்.

28) என் மனைவி 21.9.2016 ல் அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார். அவர் வீட்டிற்கு செல்லும்போது என்னிடம் சொல்லவில்லை.

29) நான் 2017 ம் வருடம் திரும்ப இந்தியாவிற்கு வந்தேன். நான் இந்தியாவிற்கு வந்தவிபரம் அவருக்கு தெரியாது. நான் தகவல் சொல்லவேண்டும் என்று நினைக்கவில்லை. நான் வந்த விபரத்தை என் பெற்றோரும் என் மனைவிக்கு சொல்லவில்லை.

30) நான் 2017 ம் வருடம் திரும்ப வந்து 2 மாதம்தான் இருந்தேன்.

31) நான் இந்தியாவிற்கு வந்ததும் மீண்டும் திரும்ப போனதும் எதிர்மனுதாரருக்கு தெரியாது.

32) அதன்பிறகு எதிர்மனுதாரர் என்னிடம் அலைபேசியில் பேசியது இல்லை. நானும் அவருடன் அலைபேசியில் பேசியது இல்லை.

33) எதிர்மனுதாரர் என்னிடம் அலைபேசியில் பேசும்போது நான் அலைபேசியை எடுக்கவில்லை என்றால் பேசும்போது அடிக்கடி சண்டை வந்தது. அதனால் நான் அலை பேசியை எடுக்கவில்லை.

34) என்னை கும்பகோணத்தில் வந்து தங்க வரசொல்லி சண்டைபோட்டார்.

35) நான் சொல்வதுபோல் எதிர் மனுதாரர் என்னை கும்பகோணத்திற்கு அழைக்கவில்லை என்றால் சரியல்ல.,

36) எதிர்மனுதாரருக்கு ஒரு அக்கா மற்றும் ஒரு அண்ணன் உள்ளார்கள். எதிர்மனுதாரர் பெற்றோர் வீட்டில் தான் எதிர்மனுதாரரின் சகோதரரும் சகோதரியும் வசித்து வருகிறார்கள் என்றால் அவர்கள் தனி தனியாக வசித்து வருகிறார்கள். எதிர்மனுதாரின் சகோதரி அவரின் கணவர் வீட்டில் தனியாக வசித்து வருகிறார்.

37) 2017 ம் வருடம் நான் வெளிநாட்டிற்கு சென்றபிறகு என் மீது வழக்கு கொடுத்ததால் நான் திரும்ப வந்தேன். 2019 ம் வருடம் புகார் கொடுத்தார்.

38) எதிர்மனுதாரர் 3 வருடம் கழித்து என்னுடன் சேர்ந்து வாழவேண்டும் என்றுதான் முதலில் புகார்

கொடுத்தார்.

39) அந்த புகாரில் என்னுடைய பெற்றோர்கள் எதிர்மனுதாரரை என்னுடைய வீட்டில் இருக்ககூடாது என்று சொல்லி இருந்தார் என்றால் சொல்லி இருந்தார். ஆனால் அது உண்மையல்ல.

40) 2019 ம் வருடம் போலிசில் சொன்னபிறகு என் தாய்மாமா வீட்டீல் நானும் எதிர்மனுதாரரும் 8 நாட்கள் சேர்ந்து இருந்தோம். அதன்பிறகு நான் வெளிநாடு சென்றுவிட்டேன். எதிர்மனுதாரரிடம் சொல்லி விட்டுதான் சென்றேன். கோவிட் இருந்ததால் உடனடியாக வரவில்லை. 2022 ம் வருடம்தான் வந்தேன்.

41) ஏற்கனவே பிரச்சினை நடந்துகொண்டிருந்ததால் நானும் எதிர்மனுதாரரும் என் பெற்றோர் வீட்டில் வசிக்காமல் என் தாய் மாமா வீட்டில் வசித்தோம். பிரச்சினை இருந்ததால் பெற்றோர் வீட்டில் வசிக்கவேண்டாம் என்று இருந்தோம்.

42) எதிர்மனுதாரர் என்னுடைய வீட்டில் இருக்ககூடாது என்பதற்காக என் பெற்றோர் அவர்கள் வீட்டில் வசிக்க கூடாது என்று சொன்னார்கள் என்றால் ஏற்கனவே பொய்யான புகார் கொடுத்ததால் அங்கு வசிக்கவில்லை.

43) நான் வெளிநாடு செல்லும்போது என் மனைவிக்கு தனியாக ஒரு வீடு எடுத்துகொடுத்துவிட்டு சென்றேன். நாகர்கோவில் திட்டுவிடையில் வீடு எடுத்து கொடுத்தேன்.அந்த வீட்டிற்கு முன் பணம் என் உறவினர் கொடுத்தார். வாடகை என் தகப்பனார் கொடுத்தார்.

44) புகார் கொடுத்த பிறகு என் தகப்பனார் எதிர்மனுதாரருடன் பேசுவது இல்லை.

45) அந்த தனி வீட்டில் எதிர்மனுதாரர் மட்டும்தான் இருந்தார். அந்த தனி வீட்டில் இருக்கும்போதும் சிறிது நாள் அலைபேசியில் பேசிக்கொண்டிருந்தோம்.

46)அந்த தனி வீட்டில் தற்சமயம் வரை எதிர்மனுதாரர் எனக்கு தெரிந்து அங்குதான் குடியிருந்து வருகிறார்.

47) இன்று வரை என் தந்தைதான் அந்த வீட்டிற்கு வாடகை கொடுத்து வருகிறார்.

48) 2022 ல் நான் திரும்ப இந்தியா வந்தபிறகு எதிர்மனுதாரருக்கு தகவல் சொன்னேனா என்றால்

அவர் கேஸ் கொடுத்து இருந்தார். அதனால் சொல்லவில்லை. அவர் சேர்ந்து வாழவேண்டும் என்றும் வரதட்சணை கொடுமை என்றும் 2வது புகார் நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்தார். அந்த காவல்நிலையத்தில் எங்களை சேர்ந்து வாழவேண்டும் என்று சொன்னார்கள்.

49) எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு எதிர்மனுதாரரின் பெற்றோரின் முகவரி சொல்லி தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

50) 2022 ல் இந்தியாவிற்கு வந்துவிட்டு பின் மீண்டும் வெளிநாடு சென்றுவிட்டேன்.

51) ஜீவனாம்சம் கேட்டு எதிர்மனுதாரர் கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

52) என்னுடைய பெற்றோர்கள் தடுக்கவில்லை என்றால் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாரா என்றால் எனக்கு விருப்பம் இல்லை.

53) என்னுடைய பெற்றோர்கள்தான் எதிர்மனுதாரருடன் என்னை சேர்ந்து வாழ தடுக்கிறார்கள் என்றால் சரியல்ல.

54) கல்யாணம் முடிந்து 8 நாட்கள் கழித்து என்னை பார்த்து எதிர்மனுதாரர் ஆண்மை அற்றவர் என்று சொன்னார்.

55) என் மனைவியை மட்டும் நான் பரிசோதனைக்காக மருத்துவமணைக்கு அழைத்து சென்றேன்.

56) என் மனைவியால் முழுமையாக சேர்ந்து வாழ (உடலுறவு) செய்ய இயலவில்லை. ஆகையால் நான் மருத்துவரிடம் அழைத்து சென்றேன். ,இந்த விபரத்தை நான் மனுவில் சொல்லவில்லை.

57) கும்பகோணம் சென்று என் தகப்பனார்தான் வக்கீலை பார்த்து வந்தார்.

58) நான் சொல்வதுபோல் என் மனைவியால் உடலுறவு முழுமையாக செய்ய இயலவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

59) எதிர்மனுதாரர் என்னை பார்த்து ஆண்மை அற்றவர் என்றோ தரக்குறைவாக பேசினார் என்பதோ சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

60) தனிகுடித்தனம் இருக்கும்போது எதிர்மனுதாரர் வீட்டில் காரை விடாமல் எதற்காக என் பெற்றோர் வீட்டில் எதிர்மனுதாரர் அண்ணன் காரை விட்டார் என்றால் அது தொடக்ககாலத்தில் நடந்தது.

61) மனுவில் சொல்லப்பட்டுள்ள என்னுடைய விலாசமும் என் பூர்விக ஊரும் இரண்டும் வெவ்வேறு.

62) என் பெற்றோர் வீட்டை பூட்டி விட்டு அவர்களுக்கு உடல்நலம் சரியில்லை என்பதால் வெளியூருக்கு சென்றுவிட்டார்கள்.

63) எதிர்மனுதாரரும் அவருடைய பெற்றோர்களும் என் பூர்விக ஊரான கண்டலவுக்கு சென்றார்கள் என்றால் சரிதான். எங்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைக்கதான் எதிர்மனுதாரரும் அவர் பெற்றோரும் அங்கு வந்தார்கள்.

64) எதிர்மனுதாரர் பிரச்சினை செய்ததால் சேர்ந்து வாழ முடியவில்லை. எதிர்மனுதாரர் என்னை மன்னிப்பு கேட்க சொன்னார். இந்த விபரத்தை நான் என் மனுவில் சொல்லவில்லை. இந்த நிகழ்வு 2017 ம் வருடம் நடந்தது.

65) முதலில் சமுக நலத்துறையில் இருந்து சம்மன் வந்தது. நான் அதில் ஆஜராகவில்லை. என் பெற்றோர்கள் ஆஜரானார்கள்.

66) எதிர்மனுதாரரின் சகோதரர் அபுதாபியில் புகார் கொடுத்ததை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அது ம.சா.ஆ.6 ஆகும். அந்த புகாரில் எதிர்மனுதாரர் அவரை விட்டுவிட்டு சென்றுவிட்டதாக புகார் கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதில் நான் கொடுத்த பதிலும் உள்ளது.

67) நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து மொத்தமாக 16 நாட்கள்தான் குடும்பம் நடத்தி இருப்போம்.

68) நான் வெளிநாட்டில் இருப்பது நிரந்தர பணி அல்ல.

69) மனு பாரா 11 ல் மனுதாரர் என்னை கொடுமை படுத்தியதாக சொல்லும் விசயங்கள் நேரடியாக நடந்ததா என்றால் எனக்கு தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் கொடுத்தார். தொலை பேசி மூலமாக தொந்தரவு கொடுத்தார் என்று மனுவில் சொல்லவில்லை.

70) என் திருமணத்திற்கு எதிர்மனுதாரர் பெற்றோர்கள் ஆல்டோ கார் கொடுத்தார்கள் என்றாலும் அதை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

71) நகைக்கு பதிலாக ரூ.6 லட்சம் எனக்கு கொடுத்தார்கள் என்றாலும் அதை இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

72) எதிர்மனுதார் வீட்டில் கொடுத்த சீர்வரிசைகள் நாகர்கோவிலில் உள்ள என் வீட்டில் தான் உள்ளது.

73) இன்றுவரை எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கேட்டு வருகிறார் என்றால் சரியல்ல.

74) நான் தாக்கல் செய்த மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை அல்ல என்றாலும் என் தந்தையால் சொல்லப்பட்டது என்றால் சரியல்ல.

75) மனுவில்சொல்லப்பட்டுள்ள விசயங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை

/உண்மை நகல்/

ஒம்/K.பூரண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.